**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30.08.2019 வெள்ளி கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை திரு.கே.அருள்முருகன்,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| **பொருள் எண்** | **பொருள்கள் விபரம்** | **நகர்மன்றத் தீர்மானம்** | |
|---|---|---|---|
| | | **தீர்மானம் எண்** | **விபரம்** |
| **1** | நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட்-2019 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | **79** | **பதிவு செய்யப்பட்டது** |
| **2** | திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பகுதிகளில் கோடை காலத்தை முன்னிட்டு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால், குடிநீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் ஆழ் குழாய் கிணறுகளை புதிதாக 6 மீட்டர் நீளத்திற்கு அமைக்கவும், கஜா புயலினால் சேதமடைந்த HDPE டேங்க் புதிதாக மாற்றுவதற்கும் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் புதிதாக அமைப்பதற்கும் ஆகும் செலவினம் ரூ.1.00இலட்சத்திற்கும் இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டி மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | **80** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
அலுவலக குறிப்பு:<br><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதியுடன் விலைப்புள்ளி பெற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவி 15-ன்கீழ் பணியினை மேற்கொண்டமைக்கும், பட்டியல் தொகை வழங்கிய அலுவலக நடவடிக்கையை மன்றம் எற்கலாம்.<br><br>
<u>(ந.க.எண்.1337/2019/இ1)</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வாராந்திர வரி வசூல் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சி வரியினங்கள் வசூலை தீவிரப்படுத்தும் பொருட்டு வரி விதிப்புதாரர்களுக்கு சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் ஆகியவற்றிற்கான கேட்பு அறிவிப்பு நோட்டீஸ் சார்வ் செய்ய வேண்டியுள்ளதால் அதனை அச்சிட்டு வழங்கிட ஒரு நகல் ஒன்றுக்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட அச்சக நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>விலைப்புள்ளி கொடுத்த நிறுவனம் விபரம்</th><th>ஒரு நகல் ஒன்றுக்கான விலைப்புள்ளி ரூ.பை</th></tr>
<tr><td>1.</td><td>சாமி சிஸ்டம்</td><td>2.00</td></tr>
<tr><td>2.</td><td>ஜோதீஸ் கம்யூட்டர்ஸ்</td><td>1.50</td></tr>
<tr><td>3.</td><td>வீரா கம்யூட்டர்ஸ்</td><td>2.50</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு:<br><br>
1. அனுமதி வழங்கலாம்.<br>
2. குறைவான விலைப்புள்ளி அளித்த ஜோதீஸ் கம்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்<br>
<u>(ந.க.எண்.122/2017/இ1)</u>
</td>
<td>81</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 4 | இந்நகராட்சியின் புதிய உரக்கிடங்கு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தரம் பிரிக்கும் ஷெட் (Segregation shed) தரை தளத்தில் விடுபட்ட பகுதிக்கு கான்கிரீட் தளம் அமைக்க ரூ.5,62,000/- மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.எஸ்.ஞானசுந்தரம் என்ற ஒப்பந்த தாரருக்கு 03.12.2018-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. கஜா புயல் காரணமாக அங்குள்ள தரம் பிரிக்கும் ஷெட் முழுவதுமாக சேதமடைந்த நிலையில் இப்பணியினை தற்போது மேற்கொள்ள இயலாது எனவும், ஒப்ந்தத்தை ரத்து செய்து, முன்வைப்புத் தொகையை திரும்ப வழங்கவும் ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், இப்பணிக்கு செலுத்தப்பட்ட முன்வைப்பு தொகை ரூ.5620/-ம் ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண்.2887/2018/இ1)** | **82** | **அனுமதிக்கப்பட்டது** |
| 5 | இந்நகராட்சியின் பயன்பாட்டிலுள்ள த.நா.50ஆர்-1074 பொலிரோ ஈப்பு வாகனத்தின் வாகன காப்பீடு 6.9.2019ம் தேதியுடன் முடிவடைவதால், வாகன காப்பீட்டினை புதுப்பித்து கொள்ளவும், இதற்கான காப்பீட்டு தொகை ரூ.15900/- ' தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., ' என்ற காப்பீட்டு நிறுவனத்திற்கு தொகை வழங்கிடவும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிடவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண்.383/2011/இ1)** | **83** | **அனுமதிக்கப்பட்டது** |
| 6 | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு-ஏ, பிளாக்-8, ந.அள.எண்கள் 25/1A, 1B (Old S.F.No.151/10A)-ல் 22066.20.8 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப் பிரிவிற்கு அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017 மற்றும் அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017 ஆகியவற்றின்படி நகர் ஊரமைப்பு | **84** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | துணை இயக்குனர், தஞ்சாவூர் அவர்கள் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப் பிரிவினை குடியிருப்பு மனைப் பிரிவாக கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ள மனைப் பிரிவு வரைபடத்தில் (கொ.ஓ.ம.வ./15 ஊ.து.இ(தம) எண் 410/2018) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உத்தேச சாலைகள் மற்றும் பூங்காக்களை மனை உரிமைதாரர் திரு.என். முருகையன் என்பவர் பத்திரப்பதிவு ஆவண எண் 1571/2019 நாள் 02.07.2019 மூலம் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கியுள்ளதை ஏற்றுக்கொள்ளவும் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப் பிரிவினை உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** பத்திரப்பதிவு எண் 1571/2019 நாள் 02.07.2019 மூலம் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை இந்நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பராமரிப்பு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கொள்கையளவு ஒப்புதலில் தெரிவிக்கப் பட்டுள்ள விதிமுறைகள் நிறைவு செய்வதால் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப் பிரிவினை வரன்முறை செய்து ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2422/2018/எப்1)** | | |
| **7** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு-ஏ, பிளாக்-5, ந.அள.எண்கள் 32/1 Pt (பழைய புல எண்கள் 34/20, 63/3A4A)-ல் 43146.00 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப் பிரிவிற்கு அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017 மற்றும் அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017 ஆகியவற்றின்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், தஞ்சாவூர் அவர்கள் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப் பிரிவினை குடியிருப்பு மனைப் பிரிவாக கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ள மனைப் பிரிவு வரைபடத்தில் (கொ.ஓ.ம.வ..15 ஊ.து.இ(தம) எண் 226/2019) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உத்தேச | **85** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | சாலைகள் மற்றும் பூங்காக்களை மனை உரிமைதாரர் திரு.கே.பால்ராஜ் என்பவர் பத்திரப் பதிவு ஆவண எண் 1791/2019 நாள் 22.07.2019 மூலம் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கியுள்ளதை ஏற்றுக்கொள்ளவும் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப் பிரிவினை உரிய நிபந்தனை களுக்குட்பட்டு வரன்முறை செய்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>1. பத்திரப்பதிவு எண் 1791/2019 நாள் 22.07.2019 மூலம் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை இந்நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பராமரிப்பு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கொள்கையளவு ஒப்புதலில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறை கள் நிறைவு செய்வதால் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறை செய்து ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.851/2019/எப்1)** | | |
| 8 | இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டிராக்டர் வாகனம் த.நா.50டி-9878-ல் உள்ள கியர் மற்றும் கிளர்ச் பிளேட், கிட், கியர் பழுதடைந்து விட்டபடியால், வாகனத்தை இயக்குவதில் சிரமநிலை ஏற்பட்டுள்ளதால், இந்நகர மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய பணியின் அவசர அவசியம் கருதியும், மேற்படி வாகன பயன்பாட்டினை கருத்தில் கொண்டு வாகன பழுதுகளை நீக்கம் செய்துகொள்ளவும், அதற்காகும் செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டி, பழுது நீக்கம் செய்து தரும் பணிக்கு 27.08.2019 அன்று குறுகியகால விலைப்புள்ளி கோரி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. | **86** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| வ. எண். | விலைப்புள்ளி கொடுத்த நிறுவனம் விபரம் | TN50D-9878 குடிநீர் டிராக்டர் கியர் மற்றும் கிளர்ச் பிளேட், கிட், கியர் புதியதாக மாற்றி சீர் செய்யும் பணிக்கு | பொருத்தி தரும் பணிக்கு லேபர் சார்ஜ் | கூடுதல் தொகை |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | M/S. Mathi Tractor Parts Wiswas Mahindra,<br>Mahindra and Mahindra Service Centre,<br>17/C2.Nadiammal colony, D.M.C. Road, Thiruthuraipoondi | 17990/- | 2400/- | 20390/- |
| 2. | M/S. Pathi Tractor Works,<br>Mannai Salai, Thiruthuraipoondi | 18230/- | 2500/- | 20730/- |
| 3. | M/S. RVT Auto Carage,<br>24. Pillaiyarkoil street,<br>Thiruthuraipoondi | 18710/- | 2500/- | 21210/- |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1-ல் கண்டுள்ள M/S. Mathi Tractor Parts Wiswas Mahindra, Mahindra and Mahindra Service Centre அளித்துள்ள விலைப்புள்ளி தொகை குறைவாகவுள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

2. குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய பணியின் அவசர அவசியம் கருதியும், மேற்படி வாகன பயன்பாட்டினை கருத்தில் கொண்டு வாகன பழுதுகளை சீர் செய்து தரும் பணிக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | **(ந.க.எண்.2354/2019/எச்1)**<br><br>**தீர்மானம் எண்:86 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** | | |
| 9 | திருத்துறைப்பூண்டி நகராட்சி வேதாரண்யம் சாலையில் உள்ள உரக்கிடங்கு வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரக் கூடத்திற்கு (MCC) புதிய மும்முனை மின் இணைப்பு பெற வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.12000/- மின் வாரியத்திற்கு செலுத்திடவும் இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்ற பொருள் வைக்கப் படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண். 2488/2019/இ1)**<br>**தீர்மானம் எண்:87** | **87** | **அனுமதிக்கப்பட்டது** |
| 10 | திருத்துறைப்பூண்டி நகராட்சி வார்டு 6 வடபாதி ஆற்றங்கரை தெருவிலுள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்படுவதால் பழுதான பாலத்தை அகற்றிவிட்டு புதிய பாலம் அமைக்க ஆகும் மதிப்பீடு ரூ.2.80இலட்சத்திற்கும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண். 2253/2019இ1)** | **88** | **அனுமதிக்கப்பட்டது** |
| 11 | இந்நகராட்சியின் வேதாரண்யம் சாலை உரக்கிடங்கு அருகில் புல எண் 256-4-ல் கட்டப்பட்டு வரும் நவீன எரிவாயு தகன மேடை பணியை ஆட்சேபித்து திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் 38/2019 நிர்வாக அலுவலர், பிறவி மருந்தீசர் திருக்கோவில் வாதியால் தொடரப்பட்ட வழக்கில் எதிர் வழக்குரை செய்ய நகராட்சியால் அமர்த்தப்பட்ட வழக்கறிஞர் | **89** | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | திரு.டி.ஆனந்தன் அவர்களுக்கு எதிர் வழக்குரை மற்றும் இடை மனு எண் 23/2019-க்கு எதிருரை தாக்கல் செய்ததற்கான வழக்கறிஞர் ஊதியமாக ரூ.7500/- வழங்கிடவும், இச்செலவினத்தையும், வருங்காலத்தில் இவ்வழக்கு தொடர்பான செலவினங்களுக்கும், நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண் 4525/2019/இ1)** | | |
| 12 | திருத்துறைப்பூண்டி நகராட்சி வேதாரண்யம் சாலையில் உள்ள உர சேமிப்புக் கிடங்கில் நிலத்தடி நீரினை பகுப்பாய்வு செய்து அறிக்கையை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் பெற்று அனுப்ப நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.17731/2019/பி3 நாள் 14.08.2019-ன்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு நிலத்தடி நீர் மாதிரி அனுப்பப்பட்டு அறிக்கை வழங்க கோரப்பட்டுள்ளது. இதற்கு கட்டணத் தொகையாக உத்தேச செலவினம் ரூ.5000/- ஆகும். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண்.2276/2019/இ1)** | **90** | **அனுமதிக்கப்பட்டது** |
| 13 | திருத்துறைப்பூண்டி நகராட்சி வேதாரண்யம் சாலையில் உள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கு மையத்தில் (MCC) குப்பைகளை வெட்டும் இயந்திரங்கள் நிறுவுவதற்கு கான்கிரீட் மேடை அமைக்கவும், இம்மையத்திற்கு மின் வசதி செய்ய வயரிங் செய்து மின் விளக்குகள் பொருத்தவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.25இலட்சத்திற்கும், இச்சலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண்.2255/2019/இ1)** | **91** | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 14 | திருத்துறைப்பூண்டி நகராட்சி வடபாதி ஆற்றங்கரை தெருவிலுள்ள உரக்கிடங்கு வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டிருந்த தரம் பிரிக்கும் கொட்டகை மற்றும் 1.3 கூரை ஷெட் ஆகியவை நவம்பர்-2018 மாதத்தில் தாக்கிய கஜா புயல் காரணமாக கூரை முழுவதும் சேதமடைந்துள்ளதை, புதிய கூரை அமைத்து புதுப்பிக்கவும், அந்த இடத்தில் வள மீட்பு மையம் (Resource Recovery Center) அமைத்து மறு சுழற்சி செய்வதற்கு சேகரிக்கப்படும் பொருட்களை இருப்பில் வைப்பதற்கான கொட்டகை அமைக்கவும், அதற்கு மின்சார வசதிகள் ஏற்படுத்த வயரிங் செய்யவும் மற்றும் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணங்களுக்கும் ஆகும் கூடுதல் செலவினம் ரூ.5.00இலட்சத் திற்கும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**(ந.க.எண்.2392/2019/இ1)** | **92** | **அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/கே.அருள்முருகன்,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/ உண்மை நகல்/